**செய்தி வெளியீடு – 518 – 21.8.2009**

**முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம்**
**வனவள மேம்பாடு – சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக**
**தமிழ்நாடு மாநில வன ஆணையம் தயாரித்த அறிக்கையை**
**ஆணையத்தின் தலைவர்**
**ஓய்வு பெற்ற மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு.பி.வி. இராஜாராமன் வழங்கினார்!**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் உள்ள வனப் பகுதிகளைக் காத்து வன வளத்தையும், சுற்றுப்புறச் சூழல்களையும் மேம்படுத்தும் நோக்குடன் இந்தியாவிலேயே முதன்முறையாக மாநில வன ஆணையத்தினை ஓய்வு பெற்ற மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு.பி.வி. இராஜாராமன் அவர்களின் தலைமையில் மாநில முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் டாக்டர் சி.கே.ஸ்ரீதரன், திருவள்ளுவர் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் எல்.கண்ணன் ஆகியோரை உறுப்பினர்களாகவும், முதன்மை வனப்பாதுகாவலர் டாக்டர் எஸ்.பாலாஜி அவர்களை உறுப்பினர் செயலராகவும் கொண்டு 2008ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அமைத்தார். இந்த வன ஆணையம் கடந்த 16 மாதங்களில் முந்நூறுக்கும் மேற்பட்ட வல்லுநர்கள், ஆயிரக்கணக்கான அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோரிடம் நேரடியாகவும், வினாப் படிவம் மூலமாகவும், மின்னஞ்சல் வழியாகவும் கருத்துரைகளைப் பெற்று அவற்றின் அடிப்படையில் அறிக்கை ஒன்றைத் தயாரித்தது. இந்த அறிக்கையில் 20 தலைப்புகளில்,

“சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், நீராதாரங்களைப் பெருக்கவும், பல்வேறு உயிரினங்களுக்கு வாழ்விடங்களாகத் திகழும் வனங்களை பேணவும் உதவும் வகையில் தமிழகத்திலுள்ள 6 இலட்சம் ஹெக்டேர் பரப்பிலுள்ள தரங்குன்றிய காடுகளை வளமான அடர்ந்த காடுகளாக மாற்ற வேண்டும்;

தற்போது 22.04 சதவீதமாகவுள்ள வனம் மற்றும் மரங்களின் பரப்பினை 33 சதவீதமாக அதிகரித்திட மேலும் 11 சதவீதம் பரப்பில் அதாவது 14 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் மரங்களை வளர்க்க உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்;

சமூகக் காடுகள் திட்டத்தின்மூலம், ஏரிக்கரைகளில் கருவேல மரங்கள் நடப்பட்டு அதன் மூலம் கிராமப்புற மக்களுக்குத் தேவையான விறகு, தடிமரம் மற்றும் கால்நடைத் தீவனம் ஆகியன அவர்கட்கு அருகிலேயே கிடைப்பதாலும், அவற்றின் விற்பனைமூலம் கிடைக்கும் வருவாயில், ஊராட்சிகளுக்கு 75 சதவீதம் அரசால் வழங்கப்படுவதாலும் இத்திட்டத்தை மீண்டும் பெரிய அளவில் செயல்படுத்த வேண்டும்;

அரசு அலுவலகங்கள், பள்ளிகள், சாலையோரம், இருப்புப் பாதையோரம் எனப் பொதுஇடங்களிலும், நகரங்களில் வீட்டுமனைகளிலும், தொழிற்சாலை வளாகங்களிலும் மரங்கள் நட அரசு வழிவகை செய்ய வேண்டும்;

10 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் உள்ள தனியார் தரிசு நிலங்களில் மரச்சாகுபடி செய்வதன்மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் மேம்படும்; மாநிலத்தின் பசுமைப்பரப்பு அதிகரிக்கும் என்பதால் பொதுமக்களின் மரம் வளர்ப்பு குறித்த சந்தேகங்களைத் தீர்த்து வைக்க 'இலவச அழைப்பு மையம்' (கால் சென்டர்) ஒன்றை வனத்துறை அமைக்க வேண்டும்;

தமிழ்நாட்டில் 1,076 கி.மீ. நீள கடற்கரையை ஒட்டிய கிராமங்களை, புயல், சூறாவளி, சுனாமி போன்ற பேரிடர்களிலிருந்து ஓரளவு பாதுகாக்கவும், 2000 ஹெக்டேர் பரப்பில் தகுந்த மர அரண்களை அமைக்கவும், 2000 ஹெக்டேர் பரப்பில் சதுப்புநிலக் (மாங்ரூவ்) காடுகளை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்;

வனவிலங்குகளான யானை, சிறுத்தை போன்றவை காட்டிலிருந்து வெளிவராமல் தடுத்து நிறுத்த வனப்பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை அதிகரிக்க வேண்டும். மேலும், அவைகளால் அடிக்கடி பாதிப்பிற்குள்ளாகும் கிராமங்களை ஒட்டி சுமார் 2,000 கி.மீ. நீளத்திற்கு சூரிய சக்தியில் செயல்படும் மின்வேலி அமைக்கப்பட வேண்டும்.

பழங்குடியினர் வாழும் வனப்பகுதிக்குச் செல்ல, ஏனைய துறை அலுவலர்களைவிட வனத்துறை அலுவலர்களுக்கு வாய்ப்புகள் அதிகம். எனவே, வனத்தை ஒட்டி வாழும் பழங்குடியினர் நலப்பணிகளை வனத்துறை மூலம் மேற்கொள்ளலாம். பழங்குடியினர் குழந்தைகளின் கல்வித்தரம் மேம்பட, வனத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் திறம்படப் பணியாற்றி வருவதால் இதுபோன்ற பள்ளிகள் பழங்குடியினர் வாழும் ஏனைய மாவட்டங்களிலும், வனத்துறை மூலம் தொடங்கப்பட வேண்டும்;

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னோடித் திட்டமான அடித்தள மக்களுக்கு இலவச சமையல் எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்தில், காட்டை ஒட்டி வாழும் மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் அவர்கள் நெடுந்தொலைவு சென்று விறகு வெட்டி எடுத்துவரும் சிரமம் குறைவதுடன், விறகு வெட்டுவதால் ஏற்படும் காட்டின் அழிவும் தடுத்து நிறுத்தப்படும்;"

– என்பன உட்பட 162 பரிந்துரைகள் கொண்ட அறிக்கையை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் மாநில வன ஆணையத்தின் தலைவர் திரு.பி.வி. இராஜாராமன், இ.ஆ.ப., குழு உறுப்பினர்கள் முன்னிலையில் இன்று (21.8.2009) வழங்கினார்.

அவ்வமயம் தமிழக வனத்துறை அமைச்சர் திரு.என்.செல்வராஜ், தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.தேவேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

*****